பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3·50

சுடர் 5 பிரமோதூத ஹூ புரட்டாதி மீ 22 உ. திங்கட்கிழமை (08 10-1990) ஹிஜ்ரி 1410 ற. அவ்வல் 18 கதிர்: 215

# வள்ளம் கவிழ்ந்து 17 அகதிகள் பலி!

## தனுஷ்கோடியில் நேற்று சம்பவம்

சென்னை, அக். 8

**தலைமன்னாரிலிருந்து ஈழத் தமிழ் அகதிகளை ஏற்றி வந்த படகு ஒன்று நேற்று அதிகாலை தனுஷ்கோடிக்கு அருகில் கவிழ்ந்தது. இதனால் படகில் இருந்தவர்களில் ஆறு பெண்கள், ஏழு குழந்தைகள் உட்பட 17 பேர் உயிரிழந்தனர்.**

உயிரிழந்தோரின் சடலங்கள் நேற்று தனுஷ்கோடி கடற்கரையில் கரை ஒதுங்கின. அவை அடையாளங் காணப்பட்ட பின்னர் அடக்கம் செய்யப்பட்டன.

இந்தப்படகில் 27 அகதிகள் பயணம் செய்தனர் என்றும்— படகினுள் தண்ணீர் புகுந்ததைத் தொடர்ந்து அதன் என்ஜின் நின்று விட்டதாகவும்—

பின்னர் பெரிய அலைகள் காரணமாக படகு கவிழ்ந்ததாகவும் கூறப்பட்டது.

தலைமன்னாரிலிருந்து புறப்பட்டதாகக் கூறப்படும் இந்தப் படகில் வல்வெட்டித்துறைப் பகுதியைச் சேர்ந்த அகதிகள் பயணம் செய்ததாகக் கூறப்பட்டது.

இதேசமயம்—

ஈழத் தமிழ் அகதிகளுடன் இராமேஸ்வரம் சென்றுகொண்டிருந்த இன்னொரு படகு நேற்று கடலினுள் மூழ்கியதாகவும்—

இந்தியக் கடற்படையினர் விரைந்து சென்று அப்படகில் இருந்தவர்களைக் காப்பாற்றியதாகவும் ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

(உ-எ-5)

## ஆயிரக் கணக்கில் பயணிகள் நேற்று வவுனியாவுக்கு

யாழ்ப்பாணம், அக். 8

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியாவுக்கு நேற்று ஆயிரக்கணக்கில் பயணிகள் புறப்பட்டுச் சென்றனர்.

நேற்று பிற்பகல் நான்கு மணிக்குப்பின்னர் வவுனியாவுக்கான சேவைகள் ஆரம்பமாகின.

ஏறத்தாழ 15 மினிபஸ்கள், 50 ஆட்டோக்கள், 50 லாண்ட்மாஸ்டர்கள், 40 டிராக்டர்கள், 30 லொறிகள், 100 துவிசக்கரவண்டிகள் என்பன நேற்று இங்கிருந்து புறப்பட்டுச் சென்றன.

வாகனங்களில் பயணிகள் நிரம்பி வழிந்ததையும் காணக்கூடியதாகவிருந்தது.

லொறிகள், டிராக்டர்களிலும் பயணிகள் ஏறிச் சென்றனர்.

நேற்று முதல்முறையாக கிளிநொச்சிக்கும் மினிபஸ்கள் சேவையில் ஈடுபட்டன.

(உ-6)

## சகல உள்ளூர் மினிபஸ் சேவைகளும் இன்று முதல்

யாழ்ப்பாணம், அக். 8

வடபிராந்திய மினிபஸ் சங்கத்தினரால் நடத்தப்படும் சகல உள்ளூர் சேவைகளும் இன்று திங்கள்முதல் மீண்டும் ஆரம்பமாகின்றன.

தனியார் மினிபஸ் சங்கத் தலைவர் திரு. பொன் மதிமுகராசா இதனைத் தெரிவித்தார்.

உள்ளூர் சேவையை நடத்தும் மினிபஸ் உரிமையாளர் இன்று முதல் தமது சேவைகளை ஆரம்பிக்கவேண்டும் என்றும், தவறினால் அவற்றின் இடம் வேறு பஸ்களுக்கு வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

பஸ் சேவையில் ஈடுபடுபவர்கள் பொதுமக்களைப் பாதிக்காத விதத்தில் நியாயமான முறையில் கட்டணங்களை அறவிடவேண்டும் என்றும்— விரைவில் உள்ளூர் பஸ்சேவைகளுக்கான கட்டணம் தீர்மானிக்கப்பட்டு சங்கத்தால் அறிவிக்கப்படும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

(இ - 6)

## பலாலி, காங்கேசனில் பீரங்கி, ஷெல் தாக்குதல்

பலாலி இராணுவ முகாமில் இருந்தும், காங்கேசன்துறை இராணுவ முகாமில் இருந்தும் நேற்று அதிகாலை ஒரே நேரத்தில் கடுமையான ஷெல் பீரங்கித் தாக்குதல்களும், துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டன.

அதிகாலை 5 மணியளவில் பலாலி முகாமிலிருந்து கட்டுவன், குரும்பசிட்டி பகுதிகளை நோக்கி ''ஷெல்'' தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் இடையிடையே துப்பாக்கிப் பிரயோகமும் இடம்பெற்றது.

அதேசமயம் காங்கேசன்துறை இராணுவ முகாம் கடற்பகுதியில் இருந்து ஏவிவிடப்பட்ட பீரங்கிக் குண்டுகள் மாவிட்டபுரம், கொல்லங்கலட்டி, கீரிமலை பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன.

இன்று நண்பகல் ஒரு மணியளவில் ஹெலிக்கொப்டர் ஒன்று சுன்னாகம், மல்லாகம் பகுதிகளில் வட்டமிட்டு இடையிடையே கவிழ்ந்[illegible] குதலை மேற்கொண்[illegible]

(உ-68)

## புலிகளால் 325 மிதிவெடிகள் ஊர்காவற்றுறையில் மீட்பு

இராணுவத்தினரால் புதைத்து வைக்கப்பட்டதாகக் கருதப்படும் 325 மிதிவெடிகள் கடந்த வியாழன், வெள்ளி, சனிக்கிழமைகளில் தம்பாட்டி, கரம்பன், ஊர்காவற்றுறை ஆகிய இடங்களில் இருந்து விடுதலைப் புலிகளினால் மீட்கப்பட்டிருக்கின்றன.

வியாழனன்று கரம்பனில் 30, வெள்ளியன்று தம்பாட்டியில் 71, ஊர்காவற்றுறையில் 50, சனியன்று தம்பாட்டியில் 174 என்ற கணக்கில் மிதிவெடிகள் மீட்கப்பட்டதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

## மன்னாரில் படை வாகனம் கண்ணியில் சிக்கியது!

யாழ்ப்பாணம், அக். 8

நேற்றுக் காலை மன்னார் மாவட்டத்தில் வங்காலை இராணுவ முகாமிலிருந்து தள்ளாடி இராணுவ முகாமுக்கு இரண்டு வாகனங்களில் சென்ற படையினர் விடுதலைப் புலிகளினால் புதைத்து வைக்கப்பட்டிருந்த வாகனக் கண்ணிவெடியில் சிக்கினர்.

தள்ளாடி—வங்காலை வீதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தின்போது இரண்டு வாகனங்களில் ஒன்றில் பயணம்செய்த சில படையினர் கொல்லப்பட்டதாகவும்—

அதுபற்றிய முழுத் தகவல்களும் கிடைக்கவில்லை என்றும் விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

## பகிரங்கமாகவே இனி பேச்சுவார்த்தையாம்!

விடுதலைப் புலிகள் இராணுவத்துடன் பேச்சுக்கள் நடத்தப்படும் நிலை ஏற்பட்டால், அப்பேச்சுக்கள் பகிரங்கமாகவே நடத்தப்படும்; இரகசியமாக நடத்தப்படமாட்டாது.

இப்படி அமைச்சர் சாகுல் ஹமீது தெரிவித்தார் என கொழும்பில் இருந்து வெளிவரும் அரச சார்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

(இ-எ)

## இலங்கை அரசு புலிகளுடன் பேச வேண்டும் என்கிறார் ஜா!

கொழும்பு, அக். 8

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் பேச்சுக்களை இலங்கை அரசு நடத்தவேண்டும் என்று கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் நாகேந்திரநாத் ஜா கேட்டிருக்கிறார்.

''சண்டே டைம்ஸ்'' பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் இந்தியத் தூதர் இவ்வேண்டுகோளை இலங்கை அரசுக்கு விடுத்து இருப்பதாக இந்திய வானொலி அறிவித்தது.

கணிசமான அதிகாரங்களுடனான பிராந்திய தன்னாட்சியை தமிழர்களுக்கு வழங்க இலங்கை அரசு தயாராக இருப்பின், ஒன்றுபட்ட இலங்கைக்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் வாய்ப்பு இருப்பதாக விடுதலைப் புலிகள் இயக்க ஆலோசகர் டாக்டர் அன்டன் பாலசிங்கம் இந்திய 'சண்டே'

(4ஆம் பக்கம் பார்க்க)

## 3 படையினர் கால் இழந்தனர்

யாழ்ப்பாணம், அக். 8

கிழக்கில் விடுதலைப் புலிகளின் மிதிவெடியில் சிக்கி மூன்று இராணுவத்தினர் கால்களை இழந்தனர்.

கடந்த சனியன்று மட்டக்களப்பு மாவட்டம் கிரான் குளத்தில் இரண்டு படையினரும்—

அம்பாறை மாவட்டம் சாகாமத்தில் கடந்த முதலாம் திகதி ஒரு சிப்பாயும் கால்களை இழந்ததாக விடுதலைப்புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

## இஸ்ரவேல் பிரசைகளுக்கு முகமூடி!

ஜெருசலேம், அக். 8

பிரசைகள் அனைவருக்கும் முகமூடி [Gas mask] வழங்கும் பணியை இஸ்ரவேல் அரசு நேற்று ஆரம்பித்தது.

ஈராக் நடத்தக்கூடும் என்று எதிர்பார்க்கப்படும் ரசாயன ஆயுதத் தாக்குதலில் இருந்து தனது பிரஜைகள் அனைவரையும் பாதுகாக்கும் நோக்குடன் இம்முகமூடிகள் வழங் [illegible] அதிகாரிகள் தெரிவித்தனர்.

(உ-எ)

## பிரதமர் சிங்கிற்கு எதிராக 29 எம்.பிக்கள் போர்க்கொடி!

### உட்கட்சி பூசல் வலுக்கிறது

புதுடில்லி, அக். 8

பிரதமர் வி. பி. சிங்கை பதவி விலகுமாறு கோரும் இயக்கம் ஒன்று ஜனதா தள் எம்.பிக்கள் மத்தியில் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக புதுடில்லிச் செய்திகள் தெரிவித்தன.

இதுவரை 29 ஜனதா தள் எம்.பிக்கள், சிங்கை பதவி விலகக் கோரும் கடிதத்தில் கையெழுத்திட்டுள்ளனர் என்று ஜனதா தள் எம்.பியும் முக்கிய தலைவருமான யஸ்வந்த் சின்ஹா தெரிவித்தார்.

இந்தக் கையெழுத்து இயக்கம் அர்த்தமற்றது என்று ஜனதா தள் பேச்சாளர் ஜெய்பால் ரெட்டி கண்டித்தார்.

அண்மையில் தான் ஜனதா தள் எம்.பிக்களின் கூட்டத்

(4ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் ஆயுதங்கள் மீட்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் 3 வீடுகளில் இருந்து ஆயுதங்கள் மீட்கப்பட்டதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த புதனன்று மல்லிகைக்காடு என்ற இடத்தில் உள்ள வீடொன்றிலிருந்து ஒரு கைத் துப்பாக்கி, 10 ரவைகள் ஆகியவையும்— தாண்டியடியில் ஆயிரத்து 460 ரவைகளும்—

கடந்த சனியன்று 13 ஆம் கொலனியின் வீடு ஒன்றில் இருந்து ஏ. கே. ரக துப்பாக்கி -1, ரவைக்கூடுகள் -10, வாக்கிடோக்கி - 1, ரவைகள் -226 ஆகியனவும் மீட்கப்பட்டதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. [உ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### TYPEWRITERS

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்தவும் மற்றும் தமிழ், ஆங்கிலம் ரைப்பிங் வேலைக்கும் Fudo Enterprises, பிரதான வீதி, மானிப்பாய், Bank - Siva Studio அருகாமையில்
(சி-5219)

### "இலவசம் நாவல்கள்"

சந்தர்ப்பத்தைத் தவற விடாதீர்கள் மீரா வெளியீடுகளாக வெளிவந்த உயிரோட்டமான நாவல்கள் 100/- ரூபாவுக்கு புத்தகங்கள் வாங்குபவர்களுக்கு 40/- ரூபாவுக்கு புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகிறது. துர்க்கா ஸ்ரேசனேர்ஸ், சுன்னாகம்.; திருக்கணிதம், சாவகச்சேரி.; ஸ்ரீகாந் புத்தகசாலை, நல்லூர், யாழ்ப்பாணம். [14386]

### இடமாற்றம்

சுன்னாகம் ஸ்ரேசன் வீதியில் அமைந்திருந்த முறிவு, நோவு வைத்திய நிலையம் தற்போது சிறுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஒழுங்கையில், இராமநாதன் இல்லத்தில் அமைந்துள்ளது காலை 9 00மணி தொடக்கம் மாலை 6 மணிவரை வைத்தியம் நடைபெறுகின்றதென்பதையும் வாடிக்கையாளருக்கு அறியத்தருகின்றேன்
பி. கிருபைராசா வசவிளான். [14391]


### பல்கலைக்கழக கவுன்சில் உறுப்பினர்

யாழ்ப்பாணம். அக். 8

யாழ் பல்கலைக்கழக கவுன்சில் அங்கத்தவராகமாகாணக் கல்விப்பணிப்பாளர் திரு. ஆர். சுந்தரலிங்கம் பல்கலைக்கழக மானியக்குழுவால் நியமிக்கப்பட்டார். (இ-3)

வவுனியாவில்

# வெளிநோயாளர் சிகிச்சை பிரிவுடன் மேலும் 2 வார்ட்டுகள் இயங்குகின்றன

வவுனியா, அக் 8

வவுனியா நகரில் ஏழ்மை நிலைமையை ஏற்படுத்தும் நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக, ஏற்கனவே இயங்கிவருகின்ற. வவுனியா, ஆதார வைத்தியசாலையின் வெளி நோயாளர் சிகிச்சைப் பிரிவுடன் இரண்டு வார்ட்டுகளும் இயங்க ஆரம்பித்துள்ளன.

பிரசவ விடுதியில் பிரசவத்தோடு பெண்நோயாளர்களுக்கான வைத்தியமும், 3 ஆம் வார்ட்டில் ஆண் நோயாளர்களுக்கு வைத்திய சேவையும் அளிக்கப்படுகின்றன

இதனிடையில், ஆஸ்பத்திரியின் வெளிநோயாளர் பிரிவில் தற்போது 100 தொடக்கம் 150 நோயாளிகள் வரையில் நாளந்தம் சராசரியாகச் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இங்கு வரும் நோயாளிகளில் 25 சதவீதமானோர் வயிற்றோட்டத்தினால் பீடிக்கப்பட்டுள்ளனர் என்றும் 2 சதவீதமானோர் மலேரியாவினால் பீடிக்கப்பட்டுள்ளனர் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, குழந்தைகளுக்கான போலியோ, மற்றும் ஏற்பு, தொண்டைக் கரப்பான், குக்கல் நோய்களுக்குரிய முக்கூட்டுத் தடுப்பூசி, சின்னம்மை நோய்த்தடுப்பூசி என்பவற்றிற்குத் தட்டுப்பாடு நிலவுததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ - 164)

## பாண் ரூ. 7.00

யாழ்ப்பாணம், அக். 8

யாழ்ப்பாணப் பகுதியில் பாண் ஏழு ரூபாவாகவும், பணிஸ் சோடி 5 ரூபாவாகவும் விற்பனையாகின்றன.

## அக்கரைப்பற்று பொலிஸ் நிலையம்

அக்கரைப்பற்று, அக். 08

அக்கரைப்பற்றில் சகல வசதிகளுடனும் கூடிய பொலிஸ் நிலையம் ஒன்று இந்த வாரம் திறக்கப்பட இருக்கிறது.

இங்கிருந்த மிருக வைத்தியசாலையை மூடி விட்டு அந்த இடத்திலேயே பொலீஸ்நிலையம் திறக்கப்பட இருக்கிறது [இ-6]

வளை குடா நாடுகளில் உள்ள

# இலங்கையரை அழைத்துவர ஐரோப்பிய சமூகம் உதவி

வளைகுடா நாடுகளில் இருந்து 14 ஆயிரம் இலங்கையரை அவர்களின் தாயகத்துக்குக் கொண்டு வருவதற்கு ஐரோப்பிய பொருளாதாரச் சமூகம் 74 லட்சம் அமெரிக்க டொலர்களைக் கொடுத்து உதவ முன்வந்துள்ளது.

இதனிடையில் — வளைகுடா நெருக்கடி காரணமாக வேலை இழந்த சுமார் ஒரு லட்சம் இலங்கையருக்கு மறுவாழ்வு அளிக்கும் பணிகள் பற்றி ஆலோசிக்க சர்வதேச தொழில் ஸ்தாபனத்தின் குழு கொழும்பை வந்தடைய உள்ளது. (இ-எ)

## சீனாவுக்கு 183 பதக்கங்கள்

பீகிங், அக். 8

பதினொராவது ஆசிய விளையாட்டு விழா நேற்று சீனாவின் தலைநகர் பீகிங்கில் முடிவடைந்தது.

16 தினங்களாக நடைபெற்ற போட்டிகளில் சீனா 183 தங்கப்பதக்கங்களை பெற்று முதலாவதாக வந்தது.

பன்னிரண்டாவது ஆசிய விளையாட்டுப் போட்டிகள் 1994 ஆம் ஆண்டில் ஜப்பான் நகரான ஹிரோஷிமாவில் நடைபெற உள்ளன. (இ-எ)

## மலேசியாவில் தேர்தல்

கோலாலம்பூர், அக். 8

மலேசியாவின் பொதுத் தேர்தல் இம்மாதம் 20 ஆம் திகதி ஆரம்பமாக உள்ளது.

ஆயுள் காலம் முடிவடைவதற்கு ஓர் ஆண்டுக்கு முன்னதாக மலேசியா நாடாளுமன்றத்தை பிரதமர் மஹத்தீர் முஹம்மது கடந்த வெள்ளிக்கிழமை கலைத்திருந்தார்.

இரண்டுதினங்கள் பொதுத் தேர்தல் நடைபெறும் (இ-எ)

## இராணுவ உதவி நிறுத்தம்

வாஷிங்டன், அக். 8

பாகிஸ்தானுக்கான இராணுவ உதவிகளை அமெரிக்கா இடைநிறுத்தி வைத்துள்ளது.

அணு ஆயுத உற்பத்தியில் பாகிஸ்தான் ஈடுபடவில்லை என்பதை உறுதிப்படுத்த அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் தவறியதைத் தொடர்ந்தே அமெரிக்க நாடாளுமன்றம் இந்த முடிவை எடுத்துள்ளது. [அ-எ]

## மேலும் 8 மாணவர்கள் தற்கொலை

புதுடில்லி, அக். 8

தொழில்வாய்ப்பில் 50 சதவீத இடங்கள் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வழங்கப்படுவதை எதிர்த்து இந்தியாவில் மேலும் 8 மாணவர்கள் தீக்குளித்தும், நஞ்சருந்தியும் கடந்த வியாழன், வெள்ளி தினங்களில் தற்கொலை செய்து கொண்டனர். (இ-எ)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

● திரு சுப்பையா நடராசா ●

மண்ணில்: 21 - 05 - 1921

விண்ணில்: 09 - 09 - 1990

நாளென் செய்யும்? வினைதான் என் செய்யும்? எனை நாடி வந்த
கோளென் செய்யும்? கொடுங் கூற்றென் செய்யும்? குமரேசர் இரு
தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்கு முன்னே வந்து தோன்றிடினே.

09-09-1990 இல் இறைவனடி சேர்ந்த சுப்பையா நடராசா அவர்களின் வீட்டுக் கிருத்தியும் 09-10-1990 செவ்வாய்க்கிழமை பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

இக் கிரியையில் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மகன் ந. ஜெகதீசன்.

''ஜெகபவனம்''
23, பிரம்படி லேன்,
கொக்குவில். (14382)

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

### சோமசுந்தரம் - இராசசிங்கம் (இராசா)

(முன்னாள் Samuel & Sons யாழ்ப்பாணம் பொறுப்பாளரும், அச்சுவேலி Hardware Stores உரிமையாளரும்)

உடுப்பிட்டி பதிவுகாரர் ஒழுங்கையைச் சேர்ந்த சோமசுந்தரம் இராசசிங்கம் 08-09-90இல் காலமானார். இவர் திரு. எஸ். ஆர். அரியரத்தினம் இளைப்பாறிய அதிபர், காலம் சென்ற திருமதி செல்வரத்தினம் முன்னாள் ஆசிரியை உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, சகோதரருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 08-09-90 நடைபெற்றபோது ஆறுதல் கூறி அனுதாபம் காட்டியவர்களுக்கும் உதவிகள் புரிந்தவர்களுக்கும் நன்றியைத் தெரிவிக்கிறோம்.

இன்று 8-10-90இல் நடைபெறும் அந்தியேட்டிகிரியைகளிலும், மதியபோசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்களைக் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

எஸ். ஆர். அரியரத்தினம்
(ஓய்வு பெற்ற அதிபர்)
உடுப்பிட்டி.
[14383]

## மரண அறிவித்தல்

### வல்லிபுரம் பறுவதம் (அம்மாகுட்டி ஆச்சி)

சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவரும் காலஞ்சென்ற தம்பாபிள்ளை வல்லிபுரத்தின் அன்பு மனைவியுமான வல்லிபுரம் பறுவதம் 07-10-90இல் காலமானார்.

அன்னார் செல்லத்துரை (முன்னாள் Police - Sergent), இராசையா (முன்னாள் Jaffna Co-Operative Foreman), செல்லம்மா, இராமலிங்கம் (முன்னாள் M. P. C. S. Manager Chavakachcheri), தருமலிங்கம் (முன்னாள் Police Sergent) ஆகியோரின் அன்புத்தாயாரும் பாக்கியலக்ஷிமி, கனகேஸ்வரி (Teacher Hindu College Chavakachcheri), சரஸ்வதியின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (08-10-90 திங்கட்கிழமை காலை 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல்:
வ. ராசையா

கற்குளி ஒழுங்கை,
சாவகச்சேரி. [14389]

## ஆண்டு 6 தொடங்கி 11 வரையிலான மாணவர்களின் கவனத்திற்கு

### அஞ்சல் கல்விச் சேவை [ வலிகாமம் பிரிவு ]

எமது நிறுவனத்தில் பயின்று கொண்டிருக்கின்ற, இதுவரை எமது நிறுவனத்தில் பயிலாத யாழ். மாவட்டத்தின் வலிகாமம் பகுதியில் வதியும் ஆண்டு 6 தொடங்கி 11 வரையிலான மாணவர்கள் இக் கல்விச் சேவையில் பயில விரும்பின் மாணவர்களின் பெயர்களை அவர்களது பெற்றோர்கள் / பாதுகாவலர்கள் 9-10-90 அன்று அல்லது அதற்கு முன்னதாக பதிவு செய்து கொள்ளுதல் வேண்டும்.

பதிவு ஏற்றுக்கொள்ளப்படும் நேரம்
தினமும் காலை 9-00 — 12-00 மணிவரை.

★ யூனிவேர்சல் ★
கந்தர்மடம் — யாழ்ப்பாணம்.
(சி/5229)

## கமநல சேவைத் திணைக்களம் முல்லைத்தீவு

### முக்கிய அறிவித்தல்

முல்லைத்தீவு கமநல சேவைத் திணைக்களத்தை சேர்ந்த பெரும்பாக உத்தியோகத்தர்கள் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் இதுவரை கடமைக்கு சமுகமளிக்காதோர் உடனடியாக தங்கள் வேலைத் தளங்களுக்கு சமுகமளிக்குமாறு பணிக்கப்படுகின்றார்கள்.

மாவட்ட காரியாலயத்தைச் சேர்ந்த சகல ஊழியர்களும் 15 - 10 - 90 ஆம் திகதியில் புதுக்குடியிருப்பு கமநல சேவைநிலையத்திற்கு தவறாது சமுகமளிக்குமாறு பணிக்கப்படுகின்றார்கள்.

செ. பஞ்சலிங்கம்
உதவி ஆணையாளர்,
க. சே. திணைக்களம்,
முல்லைத்தீவு மாவட்டம்.
[சி-5238]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## ஒய்வூதியர் பரிதாபம்

யுத்தம் காரணமாகப் பொதுமக்களில் சகல தரப்பினரும் பல வகைகளிலும் பாதிக்கப்பட்டுள்ளனர். போர்க்காலத்தில் மக்களுக்குரிய சேவைகளும், வசதிகளும் பாதிக்கப்படுவது ஒன்றும் புதிதல்ல.

இப்போதைய யுத்தத்தினால் உணவுப்பற்றாக்குறை, வைத்திய வசதியின்மை, போதிய பணப்புழக்கமின்மை, தொழில் இழப்பு, வருமான இழப்பு, பொருளாதார நலிவு, வர்த்தகம் — உற்பத்தி ஸ்தம்பிதம் ஆகிய பக்க விளைவுகளைத் தமிழ் மக்கள் எதிர்கொள்ள வேண்டி நேர்ந்துள்ளது.

எனினும் அவற்றால் பட்டினிச் சாவும், மருந்து— சிகிச்சை இல்லாததால் ஏற்படும் சாவும் எப்படியாவது தவிர்க்கப்படவேண்டியவை. அந்த இரண்டையும் தவிர்ப்பதில் தொண்டர் ஸ்தாபனத்தினரும், இங்குள்ள அரசாங்க மற்றும் வங்கி போன்ற நிறுவனங்களின் அதிகாரிகளும் அக்கறை காட்டினார்களா? அவற்றின்பால் தமக்குரிய பங்களிப்பை நல்கினார்களா என்பவை ஆராயப்பட வேண்டியவை.

கடந்த நான்கு மாதங்களாக எந்தத் தரப்பினராலும் ஏறெடுத்தும் பார்க்கப்படாதவர்களாக இப்பகுதி ஒய்வூதியக்காரர்கள் தவிக்கிறார்கள்.

ஒய்வூதியர்களில் பெரும்பாலானோர் மிக முதியவர்கள். தங்கள் வாழ்க்கையை நடத்துவதற்கு ஒய்வூதியம் ஒன்றையே நம்பி இருப்பவர்கள். அதிலேயே தங்கி இருப்பவர்கள்.

அவர்களில் குறிப்பிடத்தக்க சாரார் கைம்பெண்கள். அவர்களின் நான்கு ஐந்து பிள்ளைகளின் வாழ்க்கைச் செலவுக்கு ஒய்வூதியமே ஆதாரம்.

ஆனால் அவர்களுக்குரிய ஒய்வூதியத்தின் பெயரால் வெறும் வவுச்சர்கள் மட்டுமே வழங்கப்பட்டன. பெயருக்கு வழங்கப்பட்ட ஒய்வூதியம் எந்த விதத்திலும் உதவவில்லை.

அரசாங்கத் திணைக்களங்களின் தலைவர்கள் தமது ஊழியர்களின் சம்பளத்தைக் காசோலை வடிவத்திலாவது வழங்கித் தமது சாராரின் நலன்களைக் கவனித்துக் கொண்டார்கள்.

ஆனால் ஒய்வூதியரின் எழுபது சத வீதத்தினரின் நிலையோ மிகவும் பரிதாபகரமானது. நான்கு மாதங்கள் சென்றும் இன்னும் அவர்களுக்கு வழிபிறக்கவில்லை.

மாவட்டத்தில், உள்ள அரசாங்கத்தின் முகவர் என்ற வகையில் அரசாங்க அதிபர் இது விடயத்தில் பாராமுகமாக இருந்தது ஏனோ? இப்போது சேவையில் உள்ள அரச ஊழியருக்குப் பயனுள்ள சம்பளம் பெற்றுக்கொடுக்க முயற்சி செய்தது போல, சேவையிலிருந்து நீங்கி முதிய பருவத்தில் கஷ்டமுறும் ஒய்வூதியர்களுக்கும் ஏதோ ஒரு விதத்தில் உதவியிருக்கலாம் அல்லவா?

இன்னமும் காலம் பிந்தவில்லை. ஏதோ ஒரு வகையில் ஒய்வூதியர்களுக்கு உதவ நடவடிக்கை எடுக்க வேண்டும் எனச் சம்பந்தப்பட்ட சகலரையும் கேட்டுக் கொள்கிறோம்.

# பேர்மிட் - பங்கீட்டு அட்டைக்கான விநியோகத்தில் புதிய நடைமுறை

யாழ்ப்பாணம், அக் 8

யாழ்ப்பாண மாவட்டத்தில் பெர்மிட்டுகளுக்கான நிவாரணப் பொருள் விநியோகம், பங்கீட்டு அட்டைக்கான பொருள் விநியோகம் ஆகியவை தொடர்பாக புதிய நடைமுறை ஒன்றைக் கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய நடைமுறையின்படி நிவாரண உணவுப் பொருள்களைப் பெறுபவர்கள் தமது பெர்மிட்டுகளை ஒவ்வொரு கட்ட நிவாரணம் பெறும் போதும் - கிராம சேவையாளரிடம் சென்று பெற வேண்டும்.

இதேபோல பங்கீட்டு அட்டைகளுக்கு பொருள்களைப் பெறுவோர் கிராமசேவையாளர், உதவி அரசாங்க அதிபர் ஆகியோரிடம் சென்று உறுதிப்படுத்த வேண்டும்.

இந்த நடைமுறையினால் ஒவ்வொரு கடவையும் பொது மக்கள் சிரமப்பட வேண்டி உள்ளது.

புதிய நடைமுறையின்படி நிவாரணம் பெறுபவர்களுக்கு விசேட அட்டை ஒன்று வழங்கப்படும். இதனைப் பயன்படுத்தி தொடர்ச்சியாக ஒவ்வொரு வாரமும் நிவாரணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக அரசாங்க அதிபர் திரு. கே. சண்முகநாதன் தலைமையில், நேற்று முன்தினம் யாழ் செயலகத்தில் நடைபெற்ற உதவி அரசாங்க அதிபர்களின் கூட்டத்திலேயே இந்த மாற்றம் குறித்து பிரஸ்தாபிக்கப்பட்டது.

இது பற்றிய இறுதி முடிவு எதிர்வரும் 10 ஆம் திகதி யாழ். அரச அதிபர் தலைமையில் நடைபெறும் கூட்டத்தில் எடுக்கப்படும் எனத் தெரிய வருகிறது. (உ-6)

## ப. நோ. கூ. ச கிளைகள் சேதம்

யாழ்ப்பாணம், அக். 8

கடந்த மூன்று மாத காலமாக யாழ் குடாநாட்டில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளினால் ஊர்காவற்றுறை, வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் இருபது கிளைகள் சேதமடைந்துள்ளன.

இந்தச் சேதங்கள் பற்றிய மதிப்பீடுகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என்றும், சேதங்களை மதிப்பிட்டு அறிக்கை சமர்ப்பிக்கும்படி அந்தந்தக் கிளை முகாமையாளர்கள் கேட்டுக்கொள்ளப் பட்டிருப்பதாகவும் கூட்டுறவுத்துறை அதிகாரி ஒருவர் கூறினார். (உ-6)

## பனையால் விழுந்துமரணம்

ஏழாலை, அக். 8

மூன்று பிள்ளைகளின் தந்தை ஒருவர் பனையால் விழுந்து மரணமானார்.

ஏழாலைப்பகுதியில் இச்சம்பவம் நடந்தது.

சீவல் தொழிலாளியான செ. செல்வரத்தினம் என்பவரே இறந்தவர் வார். (இ-ரி)

## யாழ். பல்கலை ஊழியருக்கு

யாழ்ப்பாணம், அக் 8

யாழ். பல்கலைக்கழகத்தில் கடமையாற்றும் கல்வி சார்ந்த மற்றும் கல்வி சார்பற்ற சகல உத்தியோகத்தர்களையும் இன்று திங்கட்கிழமை முதல் கடமைக்கு சமுகமளிக்குமாறு உபவேந்தர் பேராசியர் ரி அ. துரைராஜா கேட்டுள்ளார். (இ-6)

## வவுனியா மாவட்டத்தில் காணமற் போனோர் பற்றி விவரம் திரட்டப்படுகிறது

வவுனியா மாவட்டத்தில் காணாமல் போனோர் பற்றிய விவரங்களைத் திரட்டுவதில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு ஈடுபட்டுள்ளது.

காணாமல் போயுள்ள 29 பேரின் விவரங்களைவவுனியா மாவட்ட பிரஜைகள் குழுவிடமிருந்து இவர்கள் பெற்றுள்ளனர்.

இன்னும் காணாமற்போய் அல்லது கைதுசெய்யப்பட்டு விவரங்கள் தெரியாது இருப்போர் வவுனியா பிரஜைகள் குழுவின் மூலம் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு கோரி உள்ளது. [இ-6]

## மீண்டும் பூசை

யாழ்ப்பாணம், அக் 08

கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக பூசை வழிபாடுகள் எதுவுமின்றி இருந்த தம்பலகாமம் ஆதிகோணேஸ்வரர் ஆலயத்தில் கடந்த வாரம் மீண்டும் பூசைகள் ஆரம்பமாகின. [இ 6]ள்

## பதுங்குகுழிக்குள் நுழைந்த ஷெல்!

யாழ்ப்பாணம், அக் 8

சமீபத்திய ராணுவ நடவடிக்கையின் போது கடற்படையின் பீரங்கிப்படகில் இருந்து ஏவப்பட்ட வெடிக்காத ஷெல் ஒன்று பதுங்குகுழி ஒன்றில் இருந்து மீட்கப்பட்டது.

சுமார் ஒன்றரை அடி நீளமான இந்த ஷெல் பதுங்குகுழிமேல் போடப்பட்டிருந்த பனம்குற்றியின் இடைவெளி ஊடாக பதுங்குகுழிக்குள் சென்றிருந்தது.

யாழ் பிரதான வீதிப்பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

இடம்பெயர்ந்திருந்த வீட்டுக்காரர் வீட்டைப்பார்வையிடச் சென்றிருந்த சமயமே பதுங்குகுழிக்குள் ஷெல்லைக் கண்டார். (இ)

## ஹெலியிலிருந்து சூடு

பச்சிலைப்பள்ளி, அக் 8

முகமாலை தேவாலயத்தில் தங்கியிருந்து தமது இருப்பிடங்களுக்கு செல்வதற்காக முகமாலைசந்தியில்கூடி நின்ற பொதுமக்களை நோக்கி ஹெலியிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

அங்கு நின்றவர்கள் நாலாபக்கமும் சிதறி ஓடினர். (இ 117)

# திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் இராணுவம் நடத்திய அட்டகாசம்!

## விவரம் அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டது

யாழ்ப்பாணம், அக் 8

கடந்த ஆகஸ்ட் மாதம் ஏழாம், எட்டாம் திகதிகளில் சரித்திரப் பிரசித்தி பெற்றதும், பாடல்பெற்ற தலமுமான திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் இராணுவத்தினர் நடத்திய அத்துமீறல்களின் போது திருவாசக மடமும் எரிக்கப்பட்டது. ஆலய உடைமைகள் பலவும் சூறையாடப்பட்டன.

இச்சம்பவம் குறித்து ஏற்கனவே உதயனில் செய்தி வெளிவந்திருந்தது.

ஆனால் அங்கு நடந்த அனர்த்தங்களை விவரிக்கும் மகஜர் ஒன்றை ஆலய நிர்வாகத்தினர் தயாரித்துள்ளனர். அதிலிருந்து மேலதிக விவரங்கள் தெரிய வந்துள்ளன.

அந்த மகஜரின் பிரகாரம் நடந்தவை வருமாறு;-

7-8 1990ஆம் திகதியன்று மன்னார், தள்ளாடி முகாமில் இருந்து, காலை சுமார் எட்டு மணியளவில் பெரும் எண்ணிக்கையான படையினர் கவச வாகனங்களில் ஆலயத்துக்கு வந்தனர்.

ஆலயத்தை அண்மித்ததும் அவர்கள் கண்டபடி, கண்மூடித்தனமாகச் சுட்டார்கள். ஆலய வளவில் நின்று நீண்ட நேரம் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

அதேவேளையில், ஆலய ஊழியர்கள் தங்கியிருந்த வீடுகளுக்கும், திருவாசக மடத்துக்கும் அவர்கள் தீ மூட்டி எரித்தனர். ஆலயத்தில் தஞ்சம் அடைந்திருந்த அகதிகள் வந்த லொறி ஒன்றையும், டிராக்டர் ஒன்றையும் படையினர் தீ மூட்டி எரித்தனர்.

அதன் பின்னர் படையினர் ஆலயத்தின் உள்ளே இருந்த களஞ்சியம், மற்றும் அறைகளை பலாத்காரமாக உடைத்துத் திறந்தனர்.

ஆலயப் பிரதம குருக்களின் வீடு, ஆலய ஊழியர்களின் வீடுகள், கதிர்காமம் யாத்திரிகர், தொண்டர்கள் மடம் சிவராத்திரி மடம், மலேசியன் யாத்திரீகர் மடம் உட்பட பல கட்டடங்களை உடைத்துத் திறந்து அங்கிருந்த பொருள்களைச் சூறையாடினர்.

தாம் எடுத்த பொருள்களுடன் அவர்கள் நண்பகலிலேயே திரும்பிச் சென்றனர்.

அடுத்த நாள் எட்டாம் திகதியும் காலை எட்டு மணியளவில் தங்கள் வாகனங்களுடன், மூன்று தனியார்லொறிகளையும் கொண்டு படையினர் ஆலயத்துள் வந்தார்கள். வந்தவுடன் கண்மூடித்தனமாகச் சுட்டார்கள்.

ஆலயத்துக்குச் சொந்தமான பெரிய ஜெனரேட்டர் மற்றும் மடங்களில் இருந்த ஐந்து சிறிய ஜெனரேட்டர்கள், நூற்றுக்கும் மேற்பட்ட சிமெந்து மூடைகள் என்பவற்றை லொறிகளில் ஏற்றினர். ஆலயத்துக்குச் சொந்தமான வாளிகள், கேற்றில்கள் உட்பட சகல சமையல் பாத்திரங்கள், அரிசி மா, சீனி போன்ற உணவுப்பொருள்கள் மடங்களிலும், பிரதம குருக்கள் வீட்டிலும் இருந்த வானொலிப் பெட்டிகள், தையல் இயந்திரங்கள், தண்ணீர் இறைக்கும் இயந்திரங்கள் போன்ற பெறுமதியான பொருள்கள் எல்லாவற்றையும் படையினர் அபகரித்துக் கொண்டு லொறிகளிலும், படை வாகனங்களிலும் அவற்றை ஏற்றிச் சென்றனர்.

ஆலய, மடப் பொருள்களை ஏற்றிச் செல்லும் போதும்; ஆலயவளவில் சுட்டு விட்டுப் போனார்கள்—என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மகஜர் அரசாங்கத்தின் கவனத்துக்கு இப்போது கொண்டு வரப்பட்டிருக்கிறது. (அ)

## சென். பீற்றர்ஸ் தேவாலயம் பலத்த சேதம்

யாழ் கோட்டைக்கு சமீபமாக அமைந்துள்ள சென். பீற்றர்ஸ் தேவாலயம் சமீபத்திய ராணுவ நடவடிக்கையினால் பெரும் அளவு சேதமடைந்துள்ளது.

தேவாலயத்தை புதிதாக நிர்மாணிக்க வேண்டிய நிலைமை இருந்து வருவதாக மெதடிஸ்த திருச்சபையின் முகாமைக்குரு அருள் திரு. கே. பி. கோவிந்தராஜ் தெரிவித்தார். (இ)

## யாழ். நகரை பார்வையிட்டனர்

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு பிரதிநிதிகள் நேற்று யாழ். நகரைப் பார்வையிட்டனர்.

மணிக்கூட்டுக் கோபுரத்தடியில் நின்று புலிக்கொடி பறக்கும் கோட்டையையும் சிறிது நேரம் நின்று பார்த்தனர். [இ-69]

# கப்பல் மூலம் உரம்; ஏற்பாடுகள் பூர்த்தி

யாழ்ப்பாணம், அக். 8

யாழ்ப்பாணக் குடாநாட்டு விவசாயிகளுக்கு உரவகைகளை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இலங்கை உரக்கூட்டுத்தாபனத்தின் யாழ்ப்பாணப் பிரிவினர். யாழ். அரச அதிபர் மூலம் தமது கொழும்புத் தலைமைக் காரியாலயத்துடன் இது சம்பந்தமாகத் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுத்துள்ளனர்.

கொழும்பிலிருந்து உரவகைகளைக் கப்பல் மூலம் கொண்டு வருவதற்கும்—

அவற்றைப் பல[illegible] கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதே சமயம் —

யாழ். குடாநாட்டுக்கு 7,500 மெற்றிக்தொன் உரவகைகள் தேவை என்றும், எனினும் முதற் கட்டமாக — அவசர தேவைக்காக — 1,000 மெற்றிக்தொன் உரம் கப்பல் மூலம் கொண்டுவரப்படஇருப்பதாகவும் அறிய வருகிறது.

முதற்கட்ட உரவகைகளை ஏற்றிவரும் கப்பல் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுவதாகச் சம்பந்தப் [illegible] வித்தன. (அ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவுச் சங்கப் பணியாளரின் சம்பளம் வழங்கவும் பணமில்லை!

## கொழும்பிலிருந்து பணம் பெற்றுத்தரக் கோரிக்கை

யாழ்ப்பாணம், அக், 8
யாழ்ப்பாணமாவட்டத்தில் உள்ள 23 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பணம் இல்லாமல் கஷ்டப்படுகின்றன

ஊழியர்களுக்குச் சம்பளம் வழங்க முடியாமல் திண்டாடுகின்றன, கூட்டுத்தாபன ஊழியர்கள் ஓய்வூதியக்காரர்களுக்கு காசோலை, வவுச்சர்களை மாற்றிக் கொடுக்கும் உதவியையும் செய்ய முடியாமல் உள்ளன

ஆகையால் அவற்றிடம் உள்ள காசோலைகளுக்கு ஈடாக கொழும்பிலிருந்து பணம் பெற்றுத் தருமாறு யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை அரசாங்க அதிபரிடம் கேட்டுள்ளது. இதே கோரிக்கை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவிடமும் விடுக்கப்பட்டது.

இதுவரை காலமும் எமது சங்கங்கள் மக்களுக்கு கட்டுப்பாட்டு விலைக்கு பொருள்களை விற்பனை செய்து வந்தன.

அத்துடன் அரச ஊழியர்களின் சம்பளக் காசோலைகள், ஓய்வூதியக்காரரின் வவுச்சர்கள் ஆகியவற்றையும் பணமாக மாற்றிக் கொடுத்தன.

போக்குவரத்து, ஊழியர்களின் சம்பளம் போன்றவை உட்பட மற்றைய செலவுகளையும் எம்மால் செய்ய முடிந்தது.

ஆனால் தற்சமயம் அரசாங்கம் வழங்கும் நிவாரணப் பொருள்கள் மட்டுமே எமது சங்கத்தினால் மக்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன. வேறு வர்த்தக நடவடிக்கைகள்இல்லை. இதனால் சங்கங்களுக்கு வருமானமும் கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே எமது ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கவும்- மேலதிகமாக பொருள்களைக் கொள்வனவு செய்து வர்த்தகத்தைப் பெருக்கவும்- எம்மிடம் உள்ள காசோலைகளை கொழும்பில் கொடுத்து பணம் பெற்றுத்தரவேண்டும். என்று அந்த கோரிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

(உ-3)

## பனம்பொருள் உற்பத்தி நாடுகள்அமைப்பு உருவாகும்

கொழும்பு, அக். 8
பனம் பொருள் உற்பத்தித் துறையில் அக்கறை காட்டும் ஐந்து நாடுகள் சேர்ந்து அமைப்பு ஒன்றை உருவாக்க உள்ளன.

இலங்கை இதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

இந்த அமைப்பில் சேர்ந்து கொள்ள தாய்லாந்து, இந்தியா, மற்றும் இந்தோனேஷியா ஆகிய நாடுகள் விருப்பம் தெரிவித்துள்ளன.

[இ-எ]

## தற்கொலை செய்த மாணவி வி.பி. சிங்கிற்கு எழுதிய கடிதம்!

புதுடில்லி, அக். 8
பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு கூடுதல்வேலைவாய்ப்பு வழங்குவதை எதிர்த்து தற்கொலை செய்துகொண்ட 15 வயது மாணவி ஒருத்தி, தனது இரண்டு கண்களையும் பிரதமர் வி பி. சிங்குக்கு தானம் செய்வதாக அறிவித்திருக்கிறார்

''எனது கண்கள் மூலம் மாணவ சமுதாயத்துக்கு நீங்கள் செய்திருக்கும் துன்பங்களைப் பாருங்கள்'' - என்று அந்த மாணவி தற்கொலை செய்வதற்று முன்னர் எழுதிய கடிதம் ஒன்றில் தெரிவித்திருந்தார்.

தற்கொலை செய்து கொண்ட மாணவி பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்தவர்.

[உ-எ]


### காங்கேசன் சிமெந்துக் கூட்டுத்தாபனம்

### அறிவித்தல்

காங்கேசன் சிமெந்துக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த நிறைவேற்று அதிகாரிகளின் கூட்டம் (கலந்துரையாடல்), எதிர்வரும் 10-9-1990 புதன்கிழமை காலை 9 மணிக்கு, தெல்லிப்பளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கருத்தரங்கு மண்டபத்தில் நடைபெறும்.

இக்கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளுமாறு சகல நிறைவேற்று அதிகாரிகளும் கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.


எஸ். ஞானபண்டிதன்
தொழிற்சாலை முகாமையாளர்

காங்கேசன் சிமெந்துக் கூட்டுத்தாபனம்,
காங்கேசன்துறை.

(சி/5239)


### 45ஆம் நாள் நினைவஞ்சலி

### சிதம்பரநாதன் ஈசன் (சியாத்)
[ கொழும்புத்துறை ]



ஈழ மண்ணில் வீர மின்னல்
சூழ்ந்து வந்து பகைவெல்லும் சுழிக்காற்று
தமிழ் மண்ணின் மாவீரன் — நீ
கோடை இடி எழில் வேங்கை
ஞான விடுதலை சூரியன் — நீ
அடிமையின் சின்னம் தகர்க்க எழுந்து — ஓர்
அதிரடித் தாக்குதல் செய்து மறைந்த
விடியலின் ராகம் இசைத்த வேங்கை நீ
விழுதென வீழ்ந்தாய்
விருட்சமாய் எழுவாய்.

—கொழும்புத்துறை வாழ் மக்கள்

(13882)

## முல்லை. மாவட்ட கமநல சேவை ஊழியருக்கு

முல்லைத்தீவு மாவட்ட கமநல சேவைத் திணைக்களத்தைச் சேர்ந்த பெரும்போக உத்தியோகத்தர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் இதுவரை கடமைக்குச் சமுகமளிக்காதவர்கள் ஆகியோரை உடனடியாக வேலைத்தளங்களுக்கு சமுக மளிக்கும்படி உதவி ஆணையாளர் செ. பஞ்சலிங்கம் கேட்டுள்ளார்.

அதேசமயம் மாவட்ட காரியாலய ஊழியர்கள் அனைவரையும் எதிர்வரும் 15 ஆம் திகதி புதுக்குடியிருப்பு கமநல சேவை நிலையத்தில் சமுகமளிக்குமாறும் அவர் கோரியுள்ளார்.

[இ-6]

## இலங்கை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்திருப்பதாகவும்—

ஆகவே அதனை அடிப்படையாகக் கொண்டு விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சுக்களை நடத்த இலங்கை அரசு முன்வர வேண்டும் என்ற கோரிக்கையை இந்தியத் தூதர் ஜா 'சண்டே டைம்ஸ்' பேட்டி மூலம் விடுத்திருப்பதாகவும் இந்திய வானொலி தெரிவித்தது.

(உ-எ)

## பிரதமர்....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தில் பிரதமருக்கு நம்பிக்கை தெரிவிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்றும் ஜெய்பால் ரெட்டி சொன்னார்:

இதனிடையில்—

பதவி விலகக் கோரும் கடிதத்தில் தாங்கள் கையெழுத்திடவில்லை என்று இரண்டு எம்.பிக்கள் தெரிவித்திருக்கின்றனர்.

தேசியப் பிரச்சினைகளுக்குச் சரியான தீர்வுகாண பிரதமர் தவறிவிட்டார் என்று பதவி விலகக்கோரும் கடிதத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

[உ-எ]

## குவைத்திலிருந்து வந்தவர் இன்னும் வீடு திரும்பவில்லை

குவைத்திலிருந்து நிர்க்கதியாகி இலங்கை திரும்பிய ஒருவர் இன்னும் வீடுவந்து சேரவில்லை.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது!-

மட்டக்களப்பைச் சேர்ந்த மாணிக்கம்போடி முருகமூர்த்தி என்னும் தமிழர் குவைத்தில் கடமையாற்றி வந்தார்.

அவர் அண்மைய வளைகுடா நெருக்கடியால் நிர்க்கதியான நிலையில் அகதியாக இலங்கை வந்துசேர்ந்தார்.

பின்னர் தனது சொந்த இடமான மட்டக்களப்புக்கு கடந்த செப்டெம்பர் 9 ஆம் திகதி இ. போ. ச. பஸ்ஸில் புறப்பட்டார்.

ஆனால் அவர் இன்னமும் வீடு வந்து சேரவில்லை.

அவர் சொம்மாதுறை தடைமுகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்று கூறப்படுகிறது.

(உ-6)

## யாழ் பிரதம தபாலகம் முழு அளவில் இயங்கும்

யாழ்ப்பாணம், அக் 8
யாழ்ப்பாணம் பிரதம தபாலகம் முழு அளவில் பழைய இடத்தில் [மாக்கெட் கட்டடத்தில்] இயங்க உள்ளதாகவும்—

அதனால் இன்று தொடக்கம் தபால் பொதிகளை அங்கு ஒப்படைக்கும் படியும். அதே போல தபாற் பொதிகளை அங்கிருந்தே எடுத்துச் செல்லும் படியும் மாகாண தபால் அத்தியட்சகர்எஸ் எம் சேதுகாவலர் சகல தபால் அதிபர்களையும் கேட்டுள்ளார்,

போர்க் காலத்தில் யாழ். பிரதம தபாலகம் பாதிக்கப்பட்டிருந்ததால் மேற்கொள்ளப்பட்டிருந்த தற்காலிக மாற்று ஒழுங்குகள் யாவும் இன்றுடன் நிறுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(அ)


### தென்மராட்சி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி நடாத்தும் போர்கால கல்வி அபிவிருத்தி பற்றிய கருத்தரங்கு

இடம்: யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி.
காலம்: 09 - 10 - 1990 மு: ப. 10 00 மணி செவ்வாய்க்கிழமை.
விடயம்: கோட்டக் கல்வி அதிகாரி. கல்வி அதிகாரிகள், கொத்தணி அதிபர்கள், பாடசாலை அதிபர்கள், சிற்றூர் அவைகளின் தலைவர்கள், செயலாளர்கள். சகல அகதி முகாம் பொறுப்பாளர்கள் ஆகியோர் தவறாது சமுகமளிக்குமாறு வேண்டுகிறோம்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி.
தென்மராட்சி.

(C/5240)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி ஆறுமுகம் கனகம்மா

திருமதி ஆறுமுகம் கனகம்மா காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா ஆறுமுகத்தின் அன்பு மனைவியும், சுந்தரலிங்கம் (Inspector Mail Vans தபாற்கந்தோர், யாழ்ப்பாணம்) அவர்களின் அன்புத் தாயாரும், திருமதி சுந்தரலிங்கம் சிவபாலாம்பிகை அவர்களின் அன்பு மாமியாரும், சஞ்ஜீவன் (சென். ஜோன்ஸ் கல்லூரி) அவர்களின் அன்புப் பேத்தியாருமாவார்.

அன்னாரின் பூகவுடல் இன்று திங்கட்கிழமை (8-10-1990) பகல 12-00 மணிக்கு தகனக்கிரியைக்காக துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத் தகவலை உறவினர்கள், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஆ. சுந்தரலிங்கம்
31, புங்கன்குளம் வீதி,
யாழ்ப்பாணம்.
[13881]

### சின்னத்தம்பி துரையப்பா

சின்னத்தம்பி துரையப்பா 07-10-90ல் காலமானார்,

இவர் இராசம்மாவின் அன்புக் கணவரும், இராசநாயகம், பரமநாயகம், பாலசுப்பிரமணியம் (சேவ்ரி பஸ் 769உரிமையாளர்), விமலாதேவி ஆகியோரின் தந்தையும், புவநேஸ்வரி, சந்திரகுமார் (சவுதிஅரேபியா) ஆகியோரின் மாமனாரும், சசிகாவின் பேரனுமாவார்.

ஈமக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரிலயகளுக்காக கொத்தியாலடி மயானத்திற்கு இன்று (8-10-90) காலை 11 மணியளவில் எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சு. பாலசுப்பிரமணியம்
ஸ்ரேசன் றோட்,
சுன்னாகம்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், தாவடி வீதி 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 08-10-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org